

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட இராஜாதோட்டம் திட்டப்பகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (26.12.2023) கட்டுமான பணியினை களஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர் வே.சண்முகசுந்தரம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் தமிழ்நாடு அரசின் விலை இல்லா மிதிவண்டி வழங்கும் விழா பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி. எஸ் இல்லாமல்லி ஸ்ரீதர் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மாணவ மாணவியருக்கு வழங்கினார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பி.சேகர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.தியாகராஜன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் திருமதி.பொற்கொடி செல்வராஜ், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் என்.பாண்டியன், உள்ளிட்ட தலைமை ஆசிரியர்கள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை வர்த்தக மையத்தில் நாளை நடைபெறுகிறது! இந்திய சமூக நீதிப் போரில் முதல் களம்!

# ‘வைக்கம் போராட்டம்’ நூற்றாண்டு சிறப்பு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - கேரள முதல்வர் பினராயி விஜயன் பங்கேற்பு!

**சென்னை, டிச.27-**

**இந்திய சமூகநீதிப் போரில் முதல் களமான வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா சென்னை வர்த்தக மையத்தில் 28.12.2023 அன்று நடைபெறுகிறது. இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.**

கேரள மாநிலம் வைக்கத்தில் மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடந்து செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதை எதிர்த்து, 1924ஆம் ஆண்டு அங்கு மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட நிலையில் போராட்டம் தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது, கேரள போராட்டத் தலைவர்கள் தந்தை பெரியார் அவர்களுக்கு கடிதம் எழுதி, இந்தப் போராட்டத்திற்கு நீங்கள் வந்துதான் உயிர்கொடுக்க வேண்டும். உடனே புறப்பட்டு வாருங்கள் என்று கோரினர். கடிதம் கிடைத்ததும், உடனே, தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு வந்து; வைக்கம் போராட்டத்தை தலைமையேற்று நடத்தி மக்களிடையே மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தினார். போராட்டம் தீவிர மடைந்தது. மக்கள் திரண்டு போராட்டத்திற்கு ஆதரவு அளித்தனர்.

அதனால் தந்தை பெரியார் அவர்கள் இரண்டு முறை கைது செய்யப்பட்டார்கள். முதல் முறை ஒரு மாதமும், இரண்டாம் முறை ஆறு மாதமும் அவருக்கு தண்டனை அளிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் கால்களிலும், கைகளிலும் சங்கிலியால் பிணைக்கப்ப ட்டு அவர் சிரமப்ப டுத்தப்ப ட்டார். இடையில் திருவாங்கூர் மகாராஜா இயற்கை எய்திடவே, ராணியார் அனைவரையும் விடுதலை செய்தார். தந்தை பெரியாருடன் சமாதானம் நடைபெற்று, வைக்கம் தெருவில் நடக்கக்கூடாது என்ற தடையை ராணி நீக்கினார். இதனால், தந்தை பெரியார் அவர்களின் போராட்டம் மகத்தான வெற்றியில் முடிந்து வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

இந்தியாவில் சமூக அளவில் சாதி காரணமாக நிலவிய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்திட நடைபெற்ற முதல் போராட்டம் இந்த வைக்கம் போராட்டம் ஆகும். இந்தப் போராட்ட வெற்றியின் 100ஆம் ஆண்டினைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டார்.

அந்த அறிவிப்புகளின் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசின் சார்பில் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா 28.12.2023 அன்று வியாழன் காலை 11.15 மணியளவில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

இந்த விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலரை வெளியிட்டு விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் “பெரியாரும் வைக்கம் போராட்டமும்” என்ற நூலை வெளியிட்டு முன்னிலையுரை ஆற்றுகிறார்.

“திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாச் சிறப்பு ரையாற்றுகிறார்.

இவ்விழாவின்போது செய்தி மக்கள் தொடர்புத் துறை தயாரித்துள்ள ‘வைக்கம் போராட்டம்’ குறித்த ஆவணப்படம் திரையிடப்பட உள்ளது. மேலும், பள்ளி மாணவர்கள் சார்பில் சமத்துவக் கொண்டாட்டம் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

# அடுத்தவருக்கு உதவுவதில் கரைந்துபோனால் வெறுப்புணர்ச்சிகள் தோற்று, மானுடம் தழைக்கும்!

## மழை வெள்ளத்தின் போது உதவிய தென் மாவட்ட மக்களுக்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, டிச.27-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் “அடுத்தவருக்கு உதவுவதில் கரைந்து போனால், வெறுப்புணர்ச்சிகள் தோற்று மானுடம் தழைக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நேசக்கரம் நீட்டி நிவாரணப் பணிகளுக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்ட தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் பண்பும், திருச்செந்தூர் விரைவு இரயில் பயணிகளைக் காப்பாற்றிய கிராம மக்களின் அன்பும், “THE BEST WAY TO FIND YOURSELF IS TO LOSE YOURSELF IN THE SERVICE OF OTHERS” என்று தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதை நினைவுபடுத்துகிறது.**

**அடுத்தவருக்கு உதவுவதில் கரைந்து போனால், வெறுப்புணர்ச்சிகள் தோற்று, மானுடம் தழைக்கும்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டு ள்ளார்.

### மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் சேதமடைந்த

# திருக்கோயில்களின் கட்டுமானங்கள் ரூ.5 கோடியில் சீரமைக்கப்படும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் முடிவு!

சென்னை, டிச.27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (26.12.2023) ஆணையர் அலுவலகத்தில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்ட திருக்கோயில்களில் சேதமடைந்த கட்டுமானப் பணிகளை சீரமைப்பது குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்கு டி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட 26 திருக்கோயில்களில் சேதமடைந்துள்ள முன் அலங்கார மண்டபம், ஏகாதசி மண்டபம், படித்துறை மண்டபம், திருமதில்சுவர், வெளித்தெப்பம் சுற்றுச்சுவர் போன்ற கட்டுமானங்களை செப்பனிட்டு சீரமைக்கும் பணிகள் தொடர்பாக விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கட்டுமானங்களை சீரமைக்க சுமார் ரூ.5 கோடி தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டு, அதன்படி, பணிகளை செய்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது. இப்பணிகளை விரைந்து தொடங்கி முடித்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை - திருமயம் ஒன்றியத்தில்

# வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை, டிச. 27 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (23.12.2023) அன்று குதுவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் இலவச திறன் பயிற்சிக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் நலனிற்காக எண்ணற்ற பல்வேறு சிறப்பான திட்டங்களையும், வேலைவாய்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. அந்தவகையில் திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் தொழில் துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 104க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளனர். அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கான பதிவு வழிகாட்டல், சுயதொழில், வங்கி கடன் உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து பிரத்தியேக அரங்கம் அமைத்து ஆலோசனை அளிக்கப்படுகிறது. மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

இத்தனியார்துறை முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. டிப்ளமோ, பி.இ. நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களும் பங்கேற்று, தங்களது தகுதிகளுக்கேற்ப பணிநியமனங்களை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

### இன்று (27-12-2023) மாலை கூடுவாஞ்சேரியில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (27.12.2023 புதன்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் நந்திவரம் - கூடுவாஞ்சேரி, ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள என்.பி.ஆர். திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- வண்டலூர் அருகே, கிளாம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைக்க முதல்வர் அவர்கள் வருகை,

ஜனவரி மாதம் சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு,

வாக்காளர்களின் விவர சேகரிப்பு பணியை துரிதப்படுத்துவது சம்மந்தமாக,

தை 1 தமிழ் புத்தாண்டு திருநாள் - பொங்கல் விழா கொண்டாடுவது குறித்து,

கழக வளர்ச்சிப் பணி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம்,வேளச்சேரி மேற்கு பகுதி 176வது வார்டு சார்பாக வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. ஏற்பாட்டில் மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஹசன் மௌலானா எம்.எல். ஏ,மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ்.வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு. சேகர்,176 அ வட்ட கழகச் செயலாளர் கே.என். தாமோதரன் நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ், வட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.கே. குட்டி,வேளச்சேரி எஸ்.விநாயகமூர்த்தி அயலக அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர் பிரபு,சேது, அஜித் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடந்த இரண்டு ஆண்டுகளில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனைகளை மக்களிடம் எடுத்துரைப்போம்!

## கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தல்!

நாமக்கல், டிச. 27 -

நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற்றது. நாமக்கல் தெற்கு நகரக் கழகச் செயலாளர் ராணா ஆனந்த் வரவேற்றார்.

நாமக்கல் எம்.எல்.ஏ. ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், கிழக்கு நகரச் செயலாளர் செ.பூபதி, மேற்கு நகரச் செயலாளர் அ.சிவக்குமார், நகர் மன்றத் தலைவர் து. கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசியதாவது,

நாமக்கல் நகரில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் செய்யப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையம், புதிய புறவழிச்சாலை, புதிய ஆவின் பால்பண்ணை போன்றவை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் விரைவில் நாமக்கல்லில் அமைக்கப்படும். நகரப் பகுதி மட்டுமல்லாது கிராமப்பகுதிகளிலும் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. வரும் 2024 ல் நாடாளுமன்ற தேர்தல் வர உள்ளது. நாம் நகரில் செய்துள்ள பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். பல்வேறு மக்கள் நலப் பணிகள் செய்துள்ளதால், நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மக்களை சந்தித்து நாம் என்ன செய்துள்ளோம் என்பதை சொல்லும் ஆற்றல் ஒவ்வொரு தி.மு.க.வினருக்கும் இருக்கிறது.

நாமக்கல் நகராட்சி விரைவில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ளது. அப்போது, நகரம் விரிவாக்கம் செய்யப்படும். நாமக்கல் நகர தி.மு.க.விற்கென தனியாக அலு வலகம் இல்லை. இதனால், கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நகரங்கள் தனித்தனியே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நாமக்கல் நகர தி.மு.க.வுக்கு சொந்த கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும். நாமக்கல் நகரில் உள்ள வார்டுகளில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து நகர்மன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற தலைவர், நகரச் செயலாளர்கள் ஆலோசித்து அந்த பணிகளை விரைவாக செய்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இராஜேஸ்குமார் எம்.பி. பேசினார்.




ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் முத்துக்கொண்டாபுரம் ஊராட்சியில் ஒன்றிய தொடக்க பள்ளிக்கான கூடுதல் வகுப்பறை கட்டடம் ரூபாய் 28 லட்சத்தில் பணிகள் நிறைவேற்றப்பட்டு நேற்று பயன்பாட்டிற்காக திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கூடுதல் ஆட்சியர் சுக புத்திரன், பொறியாளர் ராஜவேல், கழக ஒன்றிய செயலாளர் கூளூர் எம். ராஜேந்திரன், துணை திட்ட அலுவலர் முரளி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயகுமாரி சரவணன், ஒன்றிய கழக நிர்வாகிகள் காஞ்சிப்பாடி பி.சரவணன், நாபளூர் குமார், கமலநாதன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காஞ்சிபாடி ஆர். யுவராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வகுமார், பொறியாளர் இராணி, பள்ளி தலைமை ஆசிரியர் ரேவதி, ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் திலகன், தட்சிணாமூர்த்தி, ராதாகிருஷ்ணன், சரவணன் உள்ளிட்ட பொதுமக்கள் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.